செய்தி வெளியீடு எண் : 22 நாள் :16.09.2020

**தேனி மாவட்டம்**

**கொரோனா தமிழ்நாடு பொது சுகாதாரச்சட்டத்தின்கீழ் கொரோனா வைரஸ் (COVID-19) நோய்த் தொற்று தொடர்பாக விதிமீறல்களில் ஈடுபடும் நபர்களுக்கு, அபராதம் விதிப்பது தொடர்பான ஆலோசனைக்கூட்டம்-**
**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப.. அவர்கள் தலைமையில் நடைபெற்றது :-**

*****

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், கொரோனா வைரஸ் (COVID-19) தடுப்பு பணிகள் குறித்தும், கொரோனா தமிழ்நாடு பொது சுகாதாரச்சட்டத்தின்கீழ் கொரோனா வைரஸ் (COVID-19) நோய்த் தொற்று தொடர்பாக விதிமீறல்களில் ஈடுபடும் நபர்களுக்கு, அபராதம் விதிப்பது தொடர்பாகவும் அனைத்துத்துறை அலுவலர்களுடனான ஆலோசனைக்கூட்டம் இன்று (16.09.2020) மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப.. அவர்கள் தலைமையிலும், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் இ.சாய் சரண் தேஜஸ்வி இ.கா.ப., அவர்கள் முன்னிலையிலும் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:-

தேனி மாவட்டத்தில் கொரோனா நோய் தொற்றினை கட்டுப்படுத்திடும் வகையில் அனைத்து துறை அரசு அலுவலர்களும் ஒருங்கிணைந்து செயல்பட்டு, துரிதமாக பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொண்டதன் அடிப்படையில்,நமது மாவட்டத்தில் நோய்த்தொற்றின் எண்ணிக்கை வெகுவாக குறைந்து வருகிறது. துறைசார்ந்த அலுவலர்கள், தங்களது துறை ரீதியாக மேற்கொண்டு வரும் பணிகளுடன் கொரோனா நோய்த்தொற்றினைக் கட்டுப்படுத்திடும் பணிகளையும் சேர்த்து பார்க்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

கொரோனா நோய் தொற்றினை கட்டுப்படுத்திடும் வகையில் அரசால் பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கொரோனா நோய்த்தொற்றின் தாக்கம் மற்றும் விளைவு தொடர்பாக, பொது மக்களிடையே போதுமான விழிப்புணர்வு இருந்தும்,சிலர் அரசின் விதிமுறைகளை சரிவர பின்பற்றுவதில்லை.

ஆகவே தமிழ்நாடு பொது சுகாதார சட்டம் 1939 பிரிவு 76(2)-ன் கீழ் கோவிட்-19(COVID-19) நோய்த்தொற்றினை சமூகப் பரவலாக பரவாமல் தடுக்கும் வகையில், தனிமைப்படுத்தும் நடவடிக்கைகளை மீறும் செயல்களுக்கு அபராதம் விதிக்கப்பதற்கெனவும் இதனை செயல்படுத்தும் வகையில் பொதுசுகாதாரத்துறை, உள்ளாட்சி அமைப்புகள், வருவாய்த்துறை மற்றும் காவல்துறை ஆகிய துறைகளைச் சார்ந்த அலுவலர்கள் நியமிக்கப்பட்டு, இவ்வலுவலர்கள் ஊரக மற்றும் நகர்புற பகுதிகளில் கொரோன வைரஸ் நோய்த்தொற்று பரவுவதை தடுக்கும் பொருட்டும், பொது இடங்களில் விதிமீறில் ஈடுபடுபவர்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் பொருட்டும், குறிப்பிட்ட அபராத தொகையை வசூல் செய்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதில் கொரோனா நோய் பாதித்து தனிமைப்படுத்தப்படும் நபர் விதிமீறிலில் ஈடுபடும் போது ரூ.500 அபராத தொகையும், முககவசம் முறைப்படி அணியாதவர்களுக்கு ரூ.200 அபராத தொகையும், பொது இடங்களில் எச்சில் துப்புதல் செய்பவருக்கு ரூ.500 அபராத தொகையும், பொது இடங்களில் சமூக இடைவெளி கடைபிடிக்காதவர்களுக்கு ரூ.500 அபராத தொகையும் மற்றும் பொதுமக்கள் கூடும் இடங்களான சலூன் கடை,நீச்சல் குளங்கள், உடற்பயிற்சி கூடங்கள், வணிக வளாகங்கள், பொது இடங்களில் விதி மீறி செயல்படும் நிறுவனங்களுக்கு ரூ.5000 அபராத தொகையும், கொரோனா வைரஸ் நோய்த்தொற்றின் காரணமாக தடைசெய்யப்பட்ட பகுதிகளில் வழிகாட்டு நெறிமுறைகளை விதிமீறல் செய்யும் தனிநபருக்கு ரூ.500 அபராத தொகையும், வாகனம் மற்றும் வணிக வளாகங்களுக்கு ரூ.5000 அபராத தொகையும் வசூல் செய்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இப்பணிக்கென, பொது சுகாதாரத்துறை (ஊரக உள்ளாட்சி அமைப்புகள் உட்பட) மூலம் சுகாதார ஆய்வாளர் பணி நிலைக்கு குறைவில்லாத நிலையில் உள்ள அலுவலர்களும்,நகராட்சி மற்றும் இதர நகர் உள்ளாட்சி அமைப்புகள் மூலம் துப்புரவு ஆய்வாளர் பணி நிலைக்கு குறைவாக இல்லாத அலுவலர்களும் மற்றும் காவல் துறையின் மூலம் சார் ஆய்வாளர் பணிநிலைக்கு குறைவாக இல்லாத அலுவலர்களும, வருவாய்த்துறையின் மூலம் வருவாய் ஆய்வாளர் பணி நிலைக்கு குறைவில்லாத அலுவலர்களும் நியமிக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ள உள்ளனர்.

மேலும் மேற்கண்ட துறை சார்ந்த அலுவலர்கள் வசூலிக்கப்படும் அபராத தொகையினைப் பெற்று, அதற்குரிய ரசீதினை சம்பந்தப்பட்ட நபருக்கு அல்லது நிறுவனங்களுக்கு உடனே வழங்கப்பட வேண்டும். இதன் விவர அறிக்கையினை துறை சார்ந்த கள அலுவலர்கள் தங்களது தலைமை அலுவலகம் மூலமாக துணை இயக்குநர் சுகாதார பணி அலுவலகத்திற்கு மின்னஞ்சல்(dphthn@nic.in) வாயிலாக தினசரி அறிக்கையினை சமர்பிக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் அரசு தற்போது பல்வேறு தளர்வுகளை அறிவித்துள்ளதன் அடிப்படையில், பொது போக்குவரத்து, கடைத்திறப்பு நேரம் அதிகரிப்பு போன்றவைகள் நடைமுறையில் உள்ளது. அதன்படி கொரோனா நோய்த்தொற்றினை கட்டுப்படுத்தும் நோக்கில், அந்தந்த பகுதிகளில் நியமிக்கப்பட்டுள்ள நியமன அலுவலர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் மேற்கொண்ட மற்றும் மேற்கொள்ளப்பட்டு வரும் தடுப்பு பணிகள் குறித்து புள்ளி விபரங்களுடன் விரிவாக எடுத்துரைத்தனர். அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் தற்சமயம் ஒருங்கிணைந்து மேற்கொண்டு வரும் பணிகளை பாதுகாப்பாகவும், துரிதமாகவும் மேற்கொண்டு, கூடுதலாகவும் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் மற்றும் பணிகள் குறித்து, இக்கூட்டத்தின் வாயிலாக விரிவாக எடுத்துரைத்துக்கப்பட்டது.

மேலும் மாவட்டத்தில் தற்போது வரை கண்டறியப்பட்டுள்ள கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ள நபர்களின் எண்ணிக்கை, அவர்களுக்கு அளிக்கப்பட்டு வரும் சிகிச்சைகள், உணவு மற்றும் அடிப்படை வசதிகள், மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்களின் செயல்பாடுகள் மற்றும் அதில் சுழற்சி முறையில் பணியில் ஈடுபடுத்தப்பட்டு வரும் மருத்துவர்கள் மற்றும் பணியாளர்கள், தூய்மை பணியாளர்களின் எண்ணிக்கை, மருத்துவமனைகளில் படுக்கை வசதிகள், தேவையான மருத்துவ உபகரணங்கள், வென்டிலேட்டர் கருவிகள் மற்றும் கூடுதல் நடவடிக்கையாக அரசு மற்றும் தனியார் கல்லூரிகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள படுக்கை வசதி, அடிப்படை வசதிகள் ஆகியன குறித்தும், கட்டுப்படுத்தப்பட்ட பகுதிகளில் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் மற்றும் பரிசோதனை மேற்கொள்ளப்படும் பொதுமக்களின் எண்ணிக்கை,அப்பகுதிகளில் பொதுமக்கள் கடைபிடிக்கவேண்டிய வழிமுறைகள் உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகள் குறித்து துறை சார்ந்த அலுவலர்களிடம் கலந்தாலோசிக்கப்பட்டது என தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் க.ரமேஷ், மாவட்ட வருவாய் அலுவலர் (தேசிய நெடுஞ்சாலைகள்) தியாகராஜன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் பெ.திலகவதி, பெரியகுளம் சார் ஆட்சியர் செல்வி டி.சிநேகா, இ.ஆ.ப., உதவி ஆட்சியர் (பயிற்சி) ஞ. தாக்ரே சுபம், இ.ஆ.ப., துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) மரு.செந்தில், துணை காவல் கண்காணிப்பாளர்கள், வட்டாட்சியர்கள், நகராட்சி ஆணையாளர்கள் உட்பட அனைத்துத்துறை அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**